ශ්‍රී ලංකා නැගෙනහිර විශ්ව විද්‍යාලය

கிழக்குப் பல்கலைக் கழகம், இலங்கை

EASTERN UNIVERSITY, SRI LANKA

வருடாந்த அறிக்கை - 2011

கிழக்குப் பல்கலைக் கழகம், இலங்கை

வருடாந்த அறிக்கை - 2011

உள்ளடக்கம்

			பக்கம்
1.	தூரநோக்கு	-	01
2.	இலட்சியம்	-	01
3.	உபவேந்தரின் மதிப்புரை	-	01
4.	வளங்கள் மற்றும் மாணவர் விபரம்	-	06
5.	உள்ளூர் மாணவர்களின் விபரம்	-	07
6.	கல்விசார் ஊழியர்களின் விபரம்	-	08
7.	கல்விசாரா ஊழியர்களின் விபரம்	-	09
8.	ஆராச்சிகள் கண்டுபிடிப்புக்கள், வெளியீடுகள் பற்றிய விபரம்	-	10
9.	நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் என்பவற்றின் விபரம்	-	11
10.	பெற்ற விருதுகளின் விபரம்	-	13
11.	புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கற்கைகள் தொடர்பான விபரம்	-	13
12.	மீண்டெழும் செலவீனத்தின் விபரம்	-	13
13.	மூலதனச் செலவிவுகளின் விபரம்	-	14
14.	செயற் திட்டங்களின் விபரம் (உள்ளூர், வெளிநாட்டு நிதி)	-	15
15.	செயற் திட்டங்களின் செலவு விபரம் (உள்ளூர்/வெளியூர் நிதி)	-	16
16.	நிதி நிலைமை விபரம் (செலவு)	-	16
17.	நிதி நிலைமை விபரம் (பிறப்பிக்கப்பட்ட வருமானம்)	-	16
18.	நிதி செயற்றிறன் ஆய்வு – 2011	-	17
19.	கணக்காளர் தலைமையதிபதியின் அறிக்கை - 2011	-	18
20.	கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை - 2011 தொடர்பில் கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவக் குழுவின் பதிலளிப்பு	-	30

1. **தூரநோக்கு:**

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நோக்கமானது கற்பித்தல் ஆராய்ச்சி மற்றும் புலமை ஆகியவற்றில் அதி சிறந்த தரத்தை பேணுதல், நன்மை பெறக்கூடிய சகலருக்கும் கல்வி மற்றும் பயிற்சிக்கான மிகச் சிறந்த வாய்ப்புக்களை பல்கலைக்கழகத்தின் உள்ளக மற்றும் வெளியகப் பீடங்கள், வளாகங்கள் மற்றும் ஏனைய வசதிகள் ஊடாக வழங்குதல், கற்றல் மற்றும் ஆராச்சிகளின் பிரயோகங்களை ஊக்கப்படுத்துவதன் மூலம் சமூக நலன்கள், செழுமை மற்றும் கலாச்சாரங்களை முன்னேற்றுதல் மற்றும் இத்தகைய இலச்சியங்களை வினைத்திறனுடன் எய்துவதற்காக வளங்களை நிர்வகித்துப் பாதுகாத்தல் ஆகியனவாகும்.

2. **இலட்சியம் :**

பிராந்திய மற்றும் உலகளாவிய ரீதியில் ஏற்படும் நிலைமை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் போட்டி ரீதியான நயத்துடன் உயர் கற்கைகளுக்கும் ஆராய்ச்சிக்கும் உரிய தலைசிறந்த தேசிய மையமாக விளங்குவதே இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தினது இலட்சியமாகும்.

3. உபவேந்தரின் மதிப்புரை

அ. அறிமுகம்

பல்கலைக்கழக சட்ட இல.16-1978 பிரிவு 2ன் பிரகாரம் 1986ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1ம் திகதி **கிழக்குப்பல்கலைக்கழகம்** ஆரம்பிக்கப்பட்டது. இப் பல்கலைக்கழகம் 1981ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி பல்கலைக்கழக கல்லூரியாக முதலில் ஸ்தாபிக்கப்பட்டது. மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியானது ஆரம்பத்தில் விஞ்ஞான பீடத்தையும், விவசாய பீடத்தையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. பேராதனை பல்கலைக்கழகத்தின் இணைந்த கல்லூரியாக இது செயற்பட்டது. மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியானது பல்கலைக்கழகமாக 1996ஆம் ஆண்டில் தரமுயர்த்தப்பட்டபோது மேலதிக இரு பீடங்களான வர்த்தக முகாமைத்துவ பீடமும் கலைகலாசார பீடமும் ஏற்படுத்தப்பட்டன.

சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடமானது 2004ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 23ம் திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் படி 2006 ஜனவரி 23ஆம் திகதி, ஆறு திணைக்களங்களான மனித உயிரியல் திணைக்களம், துணை சுகாதார விஞ்ஞானங்கள் திணைக்களம், நோய் உடற் தொழிற்பாட்டியியல் திணைக்களம், மருத்துவ, கல்வி மற்றும் ஆராய்ச்சி திணைக்களம், பிணியியல் விஞ்ஞான திணைக்களம், ஆரம்ப சுகாதார பராமிப்பு திணைக்களம் என்பவற்றுடன் ஆரம்பிக்கப்பட்டது.

கிழக்குப்பல்கலைக்கழக **திருகோணமலை வளாகமானது** 2001ஆம் ஆண்டு யூன் மாதம் 6ம் திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் படி, தொடர்பாடல் மற்றும் வியாபார கற்கைகள், பிரயோக விஞ்ஞான பீடங்களுடன் 2001 யூன் மாதம் 15ம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டது.

சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரியானது 1981ல் சமூக விவகார மற்றும் இந்துகலாச்சார அமைச்சினால் மட்டக்களப்பில் ஸ்தாபிக்கப்பட்டது. இது 2002ஆம் ஆண்டு தை மாதம் கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு டிப்ளோமா பட்டதாரிகளுக்கு நுண்கலைமானி பட்டம் வழங்குவதற்கு ஆணைக்குழுவினால் அனுமதி வழங்கப்பட்டது. இக் கல்லூரியானது, 2001ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் கலாச்சார விவகார அமைச்சினால், உயர்கல்வி மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப அமைச்சிடம் இக்கல்லூரி வைபவரீதியாக கையளிக்கப்பட்டது. மேலும், இல.01 2005 கட்டளையின் பிரகாரம், 2005ஆம் ஆண்டு சித்திரை மாதம் 14ஆம் திகதி முதல் **சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகமாகச்** செயற்படத் தொடங்கியது.

ஆ. தகுதிவாய்ந்த அதிகாரி அவர்களின் நியமனம்

பேராசிரியர் ரஞ்சித் அத்தநாயக்க அவர்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியாக கௌரவ உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கா அவர்களால் 2011ஆம் ஆண்டு தை மாதம் 24ஆம் திகதிய, 1690/01 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பேரவைக்கு பதிலாக அதன் கடமை மற்றும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், கிழக்குப்பல்கலைக்கழகத்தின் தற்போதய நடவடிக்கைகளை மீள உறுதிப்படுத்துவதற்கும் நியமிக்கப்பட்டார்.

தகுதிவாய்ந்த அதிகாரி அவர்களினால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்:

1. கல்விசார்

- பட்டப் படிப்புக்கான உப விதிகளைத் தயாரித்தல்
- மாணவர் ஒழுக்கம் பற்றிய உப விதிகளைத் தயாரித்தல்
- கல்வி ஆண்டுக்கான நேர அட்டவணை நடைமுறைப்படுத்தப்பட்டு, பரீட்சை முடிவுகள் உரிய காலத்தில் வெளியிடப்பட்டது.
- அனைத்து மாணவர் சமூகங்களுக்கும் ஆங்கிலம் போதிப்பதற்காக ஆங்கிலமொழி போதனா பிரிவு மீள ஒழுங்கமைக்கப்பட்டது.
- தகவல் தொடர்பாடல் மற்றும் தொழிநுட்ப நிலையத்தை ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

2. நிதி விவகாரம்

- கணக்காய்வு முகாமைக்குழுவானது செயற்திறமையுடன் இயங்குகிறது.
- நிதிக்குழுவானது முறையான கட்டமைப்புடன் மீளச் செயற்படுத்தப்பட்டுள்ளது.
- மூலதன கொடையானது பீட வாரியாக ஒதுக்கப்பட்டது.
- வருமானச் செலவுக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சற் கூற்று என்பன சரியான நிதிக்கட்டுப்பாடு மற்றும் வெளிப்படைத் தன்மையுள்ளதாக மாற்றுவதற்காக வினைத்திறமையுடன் தயாரிக்கப்படுகிறது.
- கொள்வனவுகள் கொள்வனவுக் குழுவினால் முறையாக பரிசோதிக்கப்படுகிறது.
- பத்து வங்கிக் கணக்குகளுக்குப் பதிலாக ஒரு வங்கிக்கணக்கை செயற்படுத்த நடவக்கை எடுக்கப்படுள்ளது.
- அரசாங்க கணக்காய்வு பகுதியொன்று பல்கலைக்கழக வளாகத்தில் நிறுவப்பட்டது.
- நிதி நிர்வாகத்தில் காணப்பட்ட முறைகேடுகள் மற்றும் ஊழல்கள் சீர்செய்யப்பட்டன.

3. பொது நிர்வாகம்

- நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிர்மாண வேலைத்திட்டங்களுக்கு ஆலோசகராக சிரேஸ்ட சிவில் பொறியியலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.
- கல்விசார் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிவள தொழிலாளர்களின் வினைத்திறன் மிக்க செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்டு உறுதிசெய்யப்பட்டது.
- முக்கிய பதவிகளான பதிவாளர் மற்றும் நிதியாளர் பதவிகளை நிரப்புவதற்காக விளம்பரம் கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இ. சாதனைகள்

- திரு.கே.மகேசன் அவர்கள் 51.08.2011 முதல் பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இது நிர்வாக நடவடிக்கைகளை இலகுவாக்குவதுடன், அதனை படிப்படியாக கண்காணிக்கவும் கூடியதாகவுள்ளது.
- திரு.கே. கனகரெட்ணம் அவர்கள் 21.02.2011 முதல் நிதி ஆலோசகராக ஒதுக்க அடிப்படையில் நியமிக்கப்பட்டார். இதனால் நிதி நடவடிக்கைகளை மேலும் ஸ்திரப்படுத்தக் கூடியதாக இருந்தது.

- எந்திரி.எஸ்.எம். சித்திக் அவர்கள் 02.05.2011 முதல் சிரேஸ்ட சிவில் பொறியியல் ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.
- கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்விசார் விரிவாக்கத்தை ஒழுங்குபடுத்துவதற்காக, உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.
- மாணவர் ஒழுக்க உப விதி தயாரிக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.
- வெளிவாரிப் பட்டப்படிப்பு நிலையத்தின் பெயரானது வெளிவாரி பட்டப்படிப்பு மற்றும் விரிவாக்கல் பாடநெறி நிலையமாக மாற்றப்பட்டது.
- நீண்ட கால செயலிழப்பின் பின் நிதிக்குழுவானது மீள செயற்படுத்தப்பட்டது.
- நடவடிக்கைகளை இலகுவாக்க பதினொரு பல்வேறுபட்ட வங்கிக் கணக்குகளுக்குப் பதிலாக ஒரு வங்கிக் கணக்கு செயற்படுத்தப்பட்டது.
- பல்கலைக்கழக சட்டத்தின்படி அரசாங்க கணக்காய்வு பிரிவொன்று நிறுவப்பட்டது.
- 2007ஆம் ஆண்டிலிருந்து பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்களுக்கான பதிலகள் அளிக்கப்பட்டன.
- அனேகமான கல்விசார் பதவி வெற்றிடங்கள் இவ்வருடத்தில் பூரணப்படுத்தப்பட்டன.
- மோசடிச் சான்றிதழ்கள் சமர்ப்பித்த ஊளியர்களுக்கெதிராக சட்ட நவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அவர்களின் சேவையும் இடைநிறுத்தப்பட்டது.

- **10ஆவது வருடாந்த ஆய்வுத் தொடர்**

10ஆவது வருடாந்த ஆய்வுத் தொடரானது விஞ்ஞான பீடத்தால் 2011ஆம் ஆண்டு மார்கழி மாதம் 1ஆம், 2ஆம் திகதிகளில் கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞான மண்டபத்தில் வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்டது. பல்வேறுபட்ட பிரிவுகளைச் சேர்ந்த 51 ஆய்வுக் கட்டுரைகள் இங்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.

பிரிவு	**சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு கட்டுரைகள்**
விஞ்ஞானமும் தொழில் நுட்பமும்	12
சுற்றாடலும் விவசாயமும்	13
கலாச்சாரம், அடையாளம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்	12
நிர்வாக, தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சி	14

சுமார் 150 எண்ணிக்கையிலானோர் இவ் ஆய்வுத் தொடரில் கலந்து கொண்டனர். இந்நிகழ்வை ஓய்வுபெற்ற தாவரவியல் பேராசிரியை உமா குமாரசாமி அவர்கள் சிறப்பிக்க, பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் திணைக்கள பேராசிரியர் எஸ். நந்தகுமார் மற்றும் முன்னைனாள் யாழ் பல்கலைக்கழக உபவேந்தரும் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் விஞ்ஞானங்கள் நிலையியல் குழு உறுப்பினருமான ஓய்வுபெற்ற பேராசிரியர் எஸ். மோகனதாஸ் ஆகியோர் நிகழ்வின் விசேட பேச்சாளர்களாகக் கலந்துகொண்டனர்.

- 2011ஆம் ஆண்டில் நிறைவுசெய்யப்பட்ட கணக்காய்வு ஐயவினா பற்றிய விபரம்

நிறுவனத்தின் பெயர்	**ஐயவினாக்களின் எண்ணிக்கை**	**அனுப்பப்பட்ட பதில்களின் எண்ணிக்கை**
கிழக்குப் பல்கலைக்கழகம்	34	29
திருகோணமலை வளாகம்	03	03

ஈ. தோல்விகளும் அதற்கான காரணங்களும்

- பல விளம்பரங்கள் கோரப்பட்டிருந்தும் தகுதிவாய்ந்த எவரும் நிரந்தர நிதியாளர் பதவிக்கு தேரிவு செய்யப்படவில்லை.
- தவிர்க்க முடியாத காரணங்களால் இவ்வருடத்திற்கான பட்டமளிப்பு விழா நடைபெறவில்லை.

ஈ. எதிர்காலத் திட்டங்கள்

❖ கல்விசார் நடவடிக்கைகள்

1. **வர்த்தக முகாமைத்துவ பீடம்**
   புதிய கற்கைகள் ஆரம்பித்தல்
   - BCom (காப்புறுதியும் வங்கியும்)
   - BBA (சுற்றுலா)
   - BBA (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்)
   - முதுநிலைக் கற்கை (நிறுவன வளர்ச்சி)
   - M.Phil (பொருளியல்)

2. **விவசாய பீடம்**
   புதிய பட்டக் கற்கைகள் ஆரம்பித்தல்
   - உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
   - மீன்வளர்ப்பு மற்றும் மீன்பிடித்துறை

3. **விஞ்ஞான பீடம்**
   புதிய கற்கைகள் ஆரம்பித்தல்
   - கணனித் முறைமை விஞ்ஞான இளநிலைக் கற்கை (BCSS)
   - நீர்வாள முகாமைத்துவ இளநிலைக்
   - உயர் கணித மென்பொருள் தொகுப்பு சான்றிதழ் கற்கை
   - இலத்திரனியல் சான்றிதழ் கற்கை
   - மீன்வள தகவல் சேகரிப்புச் சான்றிதழ் கற்கை
   - நீரியல்வள முகாமைத்துவ டிப்ளோமா
   - கல்வியியல் முதுநிலைக் கற்கை (MSc.Ed)
   - சூழல் விஞ்ஞான முதுநிலைக் கற்கை
   - கடல்வள, சமுத்திரவியல் - நீரடிக் கற்கை (முழ்குதல்)

4. **கலை கலாசார பீடம்**
   - புதிய கற்கைகள் ஆரம்பித்தல்
     a. பட்டக் கற்கைகள்:
        முன்பள்ளி மற்றும் முன்பிள்ளைக் கல்வியில் முதுநிலை, கலாநிதி கற்கைகள்

     b. டிப்ளோமா கற்கைகள்:
        பத்திரிகையாளர், நாட்டுப்புற இலக்கியம், மொழி பெயர்ப்பும் மொழி விருத்தியும், புவியியல் தகவல் அமைப்பு, சுற்றுச் சூழல் கற்கை, அனர்த்த முகாமைத்துவம்
   - புதிய திணைக்களங்கள் நிறுவல்:
     அரசியல் மற்றும் சர்வதேச உறவுகள், தத்துவம் மற்றும் உறவுகள், சமூகவியல் மற்றும் மானிடவியல், கிறிஸ்தவம்.
   - புதிய கல்வித்துறைகள் ஆரம்பித்தல்:
     இன கலாசார கற்கை, இன இசை, நாடகமும் அரங்கியலும், ஒப்பீட்டு நடிப்புக் கலை

- புதிதாக புவியியல் தகவல் தொகுதி நிலையம் நிறுவல்.
- புவியியல் திணைக்களத்தில் புதிதாக வானிலை ஆராச்சி பிரிவு நிறுவல்.
- சமூகவிஞ்ஞான ஆராச்சி முன்னேற்ற நிலையத்தின் கீழ் புதிய நிகழ்ச்சித் திட்டம் தயாரிப்பு.
- பின்வரும் திணைக்களங்களைக் கொண்ட புதிய இந்து நாகரிக பீடம் அமைத்தல்:
  இந்துமத மற்றும் கலாசார ஆய்வுகள், இந்துமத கலை மற்றும் கட்டிடக்கலை, இந்துமத தத்துவம்.

5. சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடம்

- பின்வரும் வசதிகளைக் கொண்ட சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீட கட்டிடத்தொகுதி அமைத்தல்:
  தொலைக்காட்சி மாநாட்டு அலகு, நுலகம், குறைந்தபட்சம் 600 இருக்கைகளைக் கொண்ட கேட்போர் கூடம், சகலவிதமான கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் போதுமான உட்கட்டமைப்பைக் கொண்ட விரிவுரை மண்டபம், பல் ஒழுங்குமுறை சார்ந்த ஆய்வுகூடம், உள்ளக விளையாட்டுக்களுக்கான உடற்பயிற்சிக் கூடம், கருத்தரங்க பொது அறை மற்றும் சிற்றுண்டிச்சாலை.

6. திருகோணமலை வளாகம்

- பிரயோக விஞ்ஞான பீடத்திற்கான புதிய கட்டிடத்தொகுதி நிறுவுதல்.
- பிரயோக விஞ்ஞான பீடத்திற்கான டிஜிடல் நூலக நிர்மானம்.
- கணனி விஞ்ஞான துறையில் சிறப்புப் பட்டக் கற்கையை ஆரம்பித்தல்.
- பிரயோக பௌதீகவியல் மற்றும் மின்னணுவியல் பட்டக் கற்கைகளை புதிதாக ஆரம்பித்தல்.
- பௌதீக விஞ்ஞான துறையில் சிறப்புப் பட்டக் கற்கையை ஆரம்பித்தல்.
- தொலைக்காட்சி மாநாட்டு அலகொன்றை நிறுவுதல்.

❖ மாணவர்களுக்கான புதிய விடுதித் திட்டம்

❖ நவீன வசதிகளைக் கொண்ட உடற் பயிற்சிக் கூடம் நிறுவுதல்

4. வளங்கள் மற்றும் மாணவர் விபரம்:

பீடம்	கற்கைநெறி	மொத்த மாணவர் தொகை	மொத்த கல்விசார் ஊழியர் தொகை	மொத்த கல்விசாரா ஊழியர் தொகை
அ. கிழக்குப் பல்கலைக்கழகம்				
கலை கலாசாரம்	கலை இளமானி	1506	47	18
விவசாயம்	விவசாய விஞ்ஞான இளமானி	175	31	32
வர்த்தக	வணிக முகாமைத்துவ இளமானி	324	31	12
முகாமைத்துவம்	வர்த்தக இளமானி	318		
சௌக்கிய பராமரிப்பு	மருத்துவ இளமானி	311	17	27
விஞ்ஞானங்கள்	தாதியல் இளமானி	63		
விஞ்ஞானம்	உயிரியல் விஞ்ஞான இளமானி பௌதீகவியல் விஞ்ஞான இளமானி	218 234	32	31
மொத்தம்		**3149**	**158**	**120**
ஆ. திருகோணமலை வளாகம்				
தொடர்பாடலும், வர்த்தக முகாமைத்துவமும்	முகாமைத்துவ இளமானி தொடர்பாடல் இளமானி	243 218	18	01 -
பிரயோக விஞ்ஞானம்	கணனி விஞ்ஞான இளமானி	10	04	01
சித்த வைத்தியப் பிரிவு	சித்த வைத்தியமும் அறுவை சிகிச்சையும் இளமானி	60	06	04*
மொத்தம்		**531**	**28**	**06**

* 03 பேர் உள்வாங்கப்பட்டோர்

5. உள்ளூர் மாணவர்களின் விபரம்:

பீடம்	கற்கைநெறி	மொழி மூலம்	2011 இல் உள் வாங்கல்	1ம் வருட மாணவர்	2ம் வருட மாணவர்	3ம் வருட மாணவர்	4ம் வருட மாணவர்	5ம் வருட மாணவர்	பட்டதாரி எண்ணிக்கை
அ. கிழக்குப் பல்கலைக்கழகம்									
கலை கலாசாரம்	கலை இளமானி	தமிழ்	262	516	348	380	-	-	333
விவசாயம்	விவசாய விஞ்ஞான இளமானி	ஆங்கிலம்	73	42	36	24	-	-	27
வர்த்தக முகாமைத்துவம்	வணிக முகாமைத்துவ இளமானி	ஆங்கிலம்	105	88	79	52	-	-	74
	வர்த்தக இளமானி	ஆங்கிலம்	94	75	135	14	-	-	17
சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள்	மருத்துவ இளமானி	ஆங்கிலம்	50	50	49	98	37	27	-
	தாதியல் இளமானி	ஆங்கிலம்	26	28	04	05	-	-	-
விஞ்ஞானம்	உயிரியல் விஞ்ஞான இளமானி	ஆங்கிலம்	114	38	17	49	-	-	16
	பௌதீகவியல் விஞ்ஞான இளமானி	ஆங்கிலம்	133	49	20	32	-	-	
மொத்தம்			**857**	**886**	**688**	**654**	**37**	**27**	**467**
ஆ. திருகோணமலை வளாகம்									
தொடர்பாடலும், வர்த்தக முகாமைத்-துவமும்	முகாமைத்துவ இளமானி	ஆங்கிலம்	67	51	50	58	17	-	28
	தொடர்பாடல் இளமானி	ஆங்கிலம்	49	51	57	46	15	-	76
பிரயோக விஞ்ஞானம்	கணனி விஞ்ஞான இளமானி	ஆங்கிலம்	-	-	10	-	-	-	-
சித்த வைத்தியப் பிரிவு	சித்த வைத்தியமும் அறுவை சிகிச்சையும் இளமானி	ஆங்கிலம்	14	11	16	19	-	-	-
மொத்தம்			**130**	**113**	**133**	**123**	**32**	**-**	**104**

6. கல்விசார் ஊழியர்களின் விபரம்:

அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

பீடம்	பாடம்	மொழி மூலம்	சிரேஷ்ட பேராசிரியர்	பேராசிரியர்	சிரேஷ்ர விரிவுரை யாளர்/ விரிவுரை யாளர் (தகுதிகாண்)	போதனாசிரியர்/ வருகைதரு ஊழியர்
கலை கலாசாரம்	அராபிய மொழி, நுண் கலை, நாடகமும் அரங்கியலும், புவியியல், தழிழ், ஒப்பீட்டுச் சமயம், கிறிஸ்தவம், கல்வியியல், இஸ்லாம், இந்து நாகரிகம், வரலாறு, பொருளியல், சமூக விஞ்ஞானம், அரசியல் விஞ்ஞானம், மொழி	தமிழ்/ ஆங்கிலம்	-	02	25	27
விவசாயம்	விவசாய உயிரியல் விஞ்ஞானம், விவசாய இரசாயனவியல், விவசாய பொருளியல், விவசாய இயந்திரவியல், மிருக விஞ்ஞானம், பயிர் விஞ்ஞானம்	ஆங்கிலம்	0	02	25	04
வர்த்தக முகாமைத்துவம்	வர்த்தகம், முகாமைத்துவம், பொருளியல், மனிதவள அபிவிருத்தி, சந்தைப்படுத்தல், நிறுவன அபிவிருத்தி, கணக்கியலும் நிதியியலும், வர்த்தகப் பொருளியல், அபிவிருத்திப் பொருளியல்	ஆங்கிலம்	0	0	22	09
விஞ்ஞானம்	தாவரவியல, இரசாயணவியல், விலங்கியல், பௌதீகவியல், கணிதவியல், கணனி விஞ்ஞானம்	ஆங்கிலம்	0	0	22	10
சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள்	மனித உயிரியல், துணை சுகாதார விஞ்ஞானங்கள், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி, பிணியியல் விஞ்ஞானம், ஆரம்ப சுகாதார பராமரிப்பு, நோய் உடற் தொழிற்பாட்டியல்	ஆங்கிலம்	0	0	17	0
மொத்தம்			0	04	111	50

ஆ. திருகோணமலை வளாகம்

பீடம்	கற்கைநெறி	மொழி மூலம்	சிரேஷ்ட பேராசிரியர்	பேராசிரியர்	சிரேஷ்ட விரிவுரையாளர்/ விரிவுரையாளர் (தகுதிகாண்)	போதனாசிரியர்/ வருகைதரு ஊழியர்
தொடர்பாடலும் வர்த்தக முகாமைத்துவமும்	முகாமைத்துவம் தொடர்பாடல்	ஆங்கிலம் ஆங்கிலம்	- -	- -	05 06	- -
பிரயோக விஞ்ஞானம்	கணனி விஞ்ஞானம் பௌதீக விஞ்ஞானம்	ஆங்கிலம் ஆங்கிலம்	- -	- -	03 01	- -
சித்த வைத்தியப் பிரிவு	-	ஆங்கிலம்	-	-	05	-
மொத்தம்			-	**-**	**20**	**-**

7. கல்விசாரா ஊழியர்களின் விபரம்:

அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

பீடம்/திணைக்களம்/பகுதி/கிளைகள்/ அலகுகள்	மிகவும் மூத்த ஊழியர்	மூத்த ஊழியர்	இளம் ஊழியர்	சிற்றூழியர்
உபவேந்தர் அலுவலகம், உபவேந்தர் விடுதி	-	-	01	01
பதிவாளர் அலுவலகம்	-	-	02	01
செனட்	01	-	01	02
நிர்வாகப் பிரிவு	-	-	02	14
உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு	01	-	01	01
தொழில் வழிகாட்டல் பிரிவு	-	-	-	-
தாபனங்கள் - கல்விசாரா	-	-	03	-
தாபனங்கள் - கல்விசார்	-	-	05	01
வினியோகங்கள் பகுதி	-	-	07	01
நிதியாளர் அலுவலகம்	01	01	07	02
விவசாய பீடம்	01	03	09	19
வர்த்தக முகாமைத்துவ பீடம்	01	-	06	05
விஞ்ஞான பீடம்	02	09	10	10
சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடம்	-	01	11	15
கலை கலாசார பீடம்	01	04	10	06
தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப நிலையம்	-	-	02	01
ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவு	-	-	-	01
பரீட்சைகள் கிளை	-	02	07	03
வெளிவாரிக் கற்கைகள் நிலையம்	-	-	01	02
நூலகம்	-	01	01	04
மருத்துவ நிலையம்	-	-	-	04
உடற்கல்விப் பிரிவு	-	-	-	02
நலன்புரிப் பிரிவு	-	-	02	01
பராமரிப்புப் பிரிவு	-	-	04	21
விடுதிகள்	-	-	01	06
பாதுகாப்புப் பிரிவு	-	-	-	15
மொத்தம்	**07**	**18**	**93**	**138**

ஆ. திருகோணமலை வளாகம்

பீடம்/திணைக்களம்/பிரிவு/ கிளை/அலகு	மிகவும் மூத்த	மூத்த ஊழியர்	இளம் ஊழியர்	சிற்றூழியர்
பொது நிர்வாகம்	-	07	-	-
பராமரிப்பு பகுதி	-	-	02	-
பரீட்சைகள் கிளை	01	-	01	01
தாபனங்கள் பகுதி	-	01	-	-
நலன்புரிப் பகுதி	-	01	-	-
நிதிப் பிரிவு	04	02	01	01
நூலகம்	01	03	02	-
வர்த்தக முகாமைத்துவத் துறை	-	-	-	01
மொழியியலுக்கும் தொடர்பாடலுக்குமான துறை	-	-	-	-
பிரயோக விஞ்ஞான பீடம்	-	-		01
சித்த வைத்தியப் பிரிவு	-	-	01	-
மொத்தம்	**06**	**14**	**09**	**04**

8. ஆராச்சிகள கண்டுபிடிப்புக்கள், வெளியீடுகள் பற்றிய விபரம்:

அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

1. விவசாய பீடம்			
விபரம்	**வெளியிடப் பட்டவை**	**சந்தைப் படுத்தப்பட்டவை**	**அறிமுகப் படுத்தப்பட்டவை**
அ. ஆராச்சிகள்	62	-	23
ஆ. கண்டுபிடிப்புக்கள்	-	-	-
இ. பத்திரிகைகள்	03	-	-
ஈ. புத்தகங்கள்	01	-	-
உ. கட்டுரைகள்	-	-	13
ஊ. ஏனையவை	12	-	-
மொத்தம்	**78**	**-**	**36**

2. கலை கலாசார பீடம்			
விபரம்	**வெளியிடப் பட்டவை**	**சந்தைப் படுத்தப்பட்டவை**	**அறிமுகப் படுத்தப்பட்டவை**
அ. ஆராச்சிகள்	07	-	07
ஆ. கண்டுபிடிப்புக்கள்	-	-	-
இ. பத்திரிகைகள்	-	-	-
ஈ. புத்தகங்கள்	01	-	01
உ. கட்டுரைகள்	15	-	15
ஊ. ஏனையவை	-	-	-
மொத்தம்	**23**	**-**	**23**

3. வர்த்தக முகாமைத்துவ பீடம்			
விபரம்	**வெளியிடப் பட்டவை**	**சந்தைப் படுத்தப்பட்டவை**	**அறிமுகப் படுத்தப்பட்டவை**
அ. ஆராச்சிகள்	10	-	11
ஆ. கண்டுபிடிப்புக்கள்	-	-	-
இ. பத்திரிகைகள்	-	-	-
ஈ. புத்தகங்கள்	-	-	-
உ. கட்டுரைகள்	05	-	-
ஊ. ஏனையவை	-	-	-
மொத்தம்	**15**	**-**	**11**

4. சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம்			
விபரம்	வெளியிடப் பட்டவை	சந்தைப் படுத்தப்பட்டவை	அறிமுகப் படுத்தப்பட்டவை
அ. ஆராச்சிகள்	12	-	-
ஆ. கண்டுபிடிப்புக்கள்	-	-	
இ. பத்திரிகைகள்	-	-	05
ஈ. புத்தகங்கள்	-	-	-
உ. கட்டுரைகள்	04	-	-
ஊ. ஏனையவை	-	-	-
மொத்தம்	**16**	**-**	**05**
5. விஞ்ஞான பீடம்			
விபரம்	வெளியிடப் பட்டவை	சந்தைப் படுத்தப்பட்டவை	அறிமுகப் படுத்தப்பட்டவை
அ. ஆராச்சிகள்	28		03
ஆ. கண்டுபிடிப்புக்கள்	-		-
இ. பத்திரிகைகள்	01		-
ஈ. புத்தகங்கள்	02		-
உ. கட்டுரைகள்	-		-
ஊ. ஏனையவை	-		-
மொத்தம்	**31**		**03**

ஆ. திருகோணமலை வளாகம்

விபரம்	வெளியிடப் பட்டவை	சந்தைப் படுத்தப்பட்டவை	அறிமுகப் படுத்தப்பட்டவை
அ. ஆராச்சிகள்	-	-	03
ஆ. கண்டுபிடிப்புக்கள்	-	-	-
இ. பத்திரிகைகள்	-	-	-
ஈ. புத்தகங்கள்	-	-	-
உ. கட்டுரைகள்	-	-	-
ஊ. ஏனையவை	-	-	01
மொத்தம்	**-**	**-**	**04**

9. நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் என்பவற்றின் விபரம்

அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

1. விவசாய பீடம்			
விபரம்	கலந்து கொண்டவை	நடத்தி முடித்தவை	அறிமுகப் படுத்தப்பட்டவை
அ. பட்டப் பின்படிப்பு பட்ட கற்கை	03	-	-
ஆ. பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கை	-	-	-
இ. பட்டப் படிப்புக் கற்கை	-	-	-
ஈ. டிப்ளோமா கற்கை	-	-	-
உ. சான்றிதழ் கற்கை	03	10	-
ஊ. ஏனையவை	-		-
மொத்தம்	**06**	**10**	**-**

2. கலை கலாசார பீடம்			
விபரம்	கலந்து கொண்டவை	நடாத்தி முடித்தவை	அறிமுகப் படுத்தப்பட்டவை
அ. பட்டப் பின்படிப்பு பட்ட கற்கை	03	02	03
ஆ. பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கை	-	-	-
இ. பட்டப் படிப்புக் கற்கை	03	03	03
ஈ. டிப்ளோமா கற்கை	03	03	03
உ. சான்றிதழ் கற்கை	02	02	02
ஊ. ஏனையவை	09	-	03
மொத்தம்	**20**	**10**	**14**

3. வர்த்தக முகாமைத்துவ பீடம்			
விபரம்	கலந்து கொண்டவை	நடாத்தி முடித்தவை	அறிமுகப் படுத்தப்பட்டவை
அ. பட்டப் பின்படிப்பு பட்ட கற்கை	03	04	01
ஆ. பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கை			
இ. பட்டப் படிப்புக் கற்கை		01	
ஈ. டிப்ளோமா கற்கை			
உ. சான்றிதழ் கற்கை	01	07	01
ஊ. ஏனையவை	09	05	05
மொத்தம்	**13**	**07**	**07**

4. சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம்			
விபரம்	கலந்து கொண்டவை	நடாத்தி முடித்தவை	அறிமுகப் படுத்தப்பட்டவை
அ. பட்டப் பின்படிப்பு பட்ட கற்கை	01	01	-
ஆ. பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கை	01	-	-
இ. பட்டப் படிப்புக் கற்கை	-	-	-
ஈ. டிப்ளோமா கற்கை	-	-	-
உ. சான்றிதழ் கற்கை	01	03	03
ஊ. ஏனையவை (கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள்)	09	-	-
மொத்தம்	**12**	**04**	**04**

5. விஞ்ஞான பீடம்			
விபரம்	கலந்து கொண்டவை	நடாத்தி முடித்தவை	அறிமுகப் படுத்தப்பட்டவை
அ. பட்டப் பின்படிப்பு பட்ட கற்கை	03	02	-
ஆ. பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கை	-	-	-
இ. பட்டப் படிப்புக் கற்கை	-	-	-
ஈ. டிப்ளோமா கற்கை	-	-	-
உ. சான்றிதழ் கற்கை	-	-	-
ஊ. ஏனையவை	63	-	04
மொத்தம்	**66**	**02**	**04**

ஆ. திருகோணமலை வளாகம்

விபரம்	கலந்து கொண்டவை	நடாத்தி முடித்தவை	அறிமுகப் படுத்தப்பட்டவை
அ. பட்டப் பின்படிப்பு பட்ட கற்கை	04	03	02
ஆ. பட்டப் பின்படிப்பு டிப்ளோமா கற்கை	-	-	-
இ. பட்டப் படிப்புக் கற்கை	-	-	-
ஈ. டிப்ளோமா கற்கை	-	-	-
உ. சான்றிதழ் கற்கை	-	-	-
ஊ. ஏனையவை	-	-	-
மொத்தம்	**04**	**03**	**02**

10. பெற்ற விருதுகளின் விபரம்:

அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

1. விவசாய பீடம்			
விபரம்	**விருதுகளின் எண்ணிக்கை**	**கல்விசார் ஊழியர் எண்ணிக்கை**	**மாணவர் எண்ணிக்கை**
அ. உள்நாட்டு விருதுகள்	-	-	-
ஆ. அகில இலங்கை விருதுகள்	-	-	-
இ. சர்வதேச விருதுகள்	01	-	-
ஈ. ஏனையவை	-	-	-
மொத்தம்	**01**	**-**	**-**
2. சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடம்			
விபரம்	**விருதுகளின் எண்ணிக்கை**	**கல்விசார் ஊழியர் எண்ணிக்கை**	**மாணவர் எண்ணிக்கை**
அ. உள்நாட்டு விருதுகள்	-	-	-
ஆ. அகில இலங்கை விருதுகள்	01	-	-
இ. சர்வதேச விருதுகள்	-	-	-
ஈ. ஏனையவை	-	-	-
மொத்தம்	**01**	**-**	**-**

11. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கற்கைகள் தொடர்பான விபரம்:

அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

பீடம்	கற்கைநெறி	மொழி	முது நிலை
1. விஞ்ஞான பீடம்	M.Sc in Science Education	English	01
மொத்தம்			**01**

12. மீண்டெழும் செலவீனத்தின் விபரம்:

அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

விபரம்	2010 ரூபா.	2011 ரூபா.
ஆளணி ஊதியம்	268,376,379.00	278,295,941.69
பிரயாணம்	2,244,379.00	1,324,620.30
விநியோகம்	18,407,368.00	20,538,845.73
பராமரிப்பு	16,279,528.00	8,506,836.13
ஒப்பந்தம் வேலை	45,776,421.00	48,786,417.51
ஏனையவை	12,061,250.00	10,544,669.74
மொத்தம்	**363,145,325.00**	**367,997,331.10**

ஆ. திருகோணமலை வளாகம்

விபரம்	2010 ரூபா.	2011 ரூபா.
ஆளணி ஊதியம்	30,931,244.73	33,554,885.25
பிரயாணம்	406,098.50	267,113.78
விநியோகம்	2,815,663.25	4,262,968.12
பராமரிப்பு	2,286,007.32	2,413,526.93
ஒப்பந்தம் வேலை	20,008,314.08	27,394,627.28
ஏனையவை	6,694,595.18	1,692,524.28
மொத்தம்	**63,141,923.06**	**69,585,663.64**

13. மூலதனச் செலவிவுகளின் விபரம்:

அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

விபரம்	2010 ரூபா	2011 ரூபா
அ. தளபாடங்கள் மற்றும் காரியாலய உபகரணங்கள் கொள்வனவு	9,666,464.52	14,230,524.46
ஆ. இயந்திரங்கள் கொள்வனவு	-	
இ. கட்டடம் மற்றும் கட்டமைப்புச் செலவு	62,278,578.97	9,815,888.46
ஈ. ஏனையவை	-	49,872,259.13
மொத்தம்	**71,945,043.49**	**73,918,672.05**

ஆ. திருகோணமலை வளாகம்

விபரம்	2010 ரூபா	2011 ரூபா
அ. தளபாடங்கள் மற்றும் காரியாலய உபகரணங்கள் கொள்வனவு	863,037.00	1,207,770.50
ஆ. இயந்திரங்கள் கொள்வனவு	-	-
இ. கட்டடம் மற்றும் கட்டமைப்புச் செலவு	1,128,562.70	5,260,250.04
ஈ. ஏனையவை	2,104,795.83	809,916.55
மொத்தம்	**4,096,395.53**	**7,299,937.09**

14. செயற் திட்டங்களின் விபரம் (உள்ளூர், வெளிநாட்டு நிதி) "

அ. திருகோணமலை வளாகம்

பெயர் விபரம்	கடன் / கொடை	நிதி வழங்குனர் #	TCE ரூபா	RF A ரூபா	DF ரூபா
வகுப்பறை கட்டிட திருத்தம் (விரிவுரை மண்டபம் -01)	கொடை	GOSL	1,059,285.00	-	-
ஆண்கள் விடுதி	கொடை	GOSL	100,000,000.00	-	-
பெண்கள் விடுதி	கொடை	GOSL	100,000,000.00	-	-
வகுப்பறை கட்டிட திருத்தம் (விரிவுரை மண்டபம் -02)	கொடை	GOSL	786,155.00	-	-
வகுப்பறை கட்டிட திருத்தம் (விரிவுரை மண்டபம் -03)	கொடை	GOSL	863,615.00	-	-
LCT பார்வையாளர் அறை திருத்தம்	கொடை	GOSL	1,133,150.00	-	-
நுளைவாயில் திருத்தம் Improvement of front entrance	கொடை	GOSL	1,569,675.88	-	-
தற்போதுள்ள கட்டிடங்களை சுற்றியுள்ள வடிகால் தொகுதி	கொடை	GOSL	1,193,250.00	-	-
ஆண்கள் மற்றும் பெண்கள் மலசலகூட புனர்நிர்மாணம்	கொடை	GOSL	659,827.00	-	-
வர்த்தக முகாமைத்துவ கற்கை விரிவுரை மண்டப மற்றும் அலுவலக புனர்நிர்மாணம்	கொடை	GOSL	2,384,395.00	-	-
மின்பிறப்பாக்கி அறை புனர்நிர்மாணம்	கொடை	GOSL	247,245.00	-	-
பௌதீக விஞ்ஞான பீட விரிவுரை மண்டப மற்றும் அலுவலக புனர்நிர்மாணம்	கொடை	GOSL	3,215,330.00	-	-
இல: 315, டொக்கியாட் வீதி, திருகோணமலை மலசலகூடம் (05), குளியலறை (05) புனர்நிர்மாணம்	கொடை	GOSL	1,453,043.40	-	-
பௌதீக விஞ்ஞான பீட விரிவுரை மண்டபம் திருத்தம்	கொடை	GOSL	1,246,500.00	-	-
மொத்தம்			**215,811,471.28**	**-**	**-**

(GOSL / ADB / IDA / WB / ……….)

15. செயற் திட்டங்களின் செலவு விபரம் (உள்ளூர்/வெளியூர் நிதி)

அ. திருகோணமலை வளாகம்

பெயர்	TCE Rs.	2010 இல் செலவு ரூபா	2011 இல் செலவு ரூபா	31.12.2011 இல் திரண்ட செலவு	பௌதீக முன்னேற்றம் % தில்
திருமலை வளாகத்தின் மீளமைவு	128,304,000.00	9,312,558.00	107,360,896	-	-
ஆண்கள் விடுதி	100,000,000.00	-	-	-	-
பொண்கள் விடுதி	100,000,000.00	-	-	-	-
விஞ்ஞான ஆய்வுகூடம்	14,000,000.00	-	-	-	-
மொத்தம்	**342,304,000.00**	**9,312,558.00**	**107,360,896**	**-**	**-**

16. நிதி நிலைமை விபரம் (செலவு)

திருகோணமலை வளாகம்

விபரம்	2010இல் ஒதுக்கப்பட்ட தொகை ரூபா	2010 இல் செலவுகள் ரூபா	சேமிப்பு/ மிகுதி ரூபா
அ. செயற் திட்டங்கள் தவிர்ந்த மீண்டெழும் செலவீனங்கள	69,493,000	70,033,320	(540,320)
ஆ. செயற் திட்டங்கள் தவிர்ந்த மூலதன செலவீனங்கள்	29,000,000	7,277,937	21,722,063
இ. செயற் திட்டம் - உள்ளூர் நிதி	100,000,000	10,050,286	89,949,714
ஈ. செயற் திட்டம் - வெளிநாட்டு நிதி	-	-	-
மொத்தம்	**198,493,000**	**87,361,543**	**111,131,457**

17. நிதி நிலைமை விபரம் (பிறப்பிக்கப்பட்ட வருமானம்)

அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

வருமான மூலங்கள்	2011இல் ஒதுக்கம் ரூபா.	2011இல் திரட்டப்பட்டது ரூபா.	பற்றாக்குறை/ மேலதிகம் ரூபா.
பட்டப்படிப்புக் கற்கைகள் (வெளிவாரி)	-	4,326,610.16	-
பட்டமேற்படிப்புக் கற்கைகள்	-	2,327,775.60	-
ஏனையவை	-	11,039,201.55	-
மொத்தம்	**-**	**18,039,587.31**	**-**

ஆ. திருகோணமலை வளாகம்

வருமான மூலங்கள்	2011இல் ஒதுக்கம் ரூபா.	2011இல் திரட்டப்பட்டது ரூபா.	பற்றாக்குறை/ மேலதிகம் ரூபா.
பட்டப்படிப்புக் கற்கைகள்	1,845,000.00	1,653,100.00	(191,900.00)
பட்டமேற்படிப்புக் கற்கைகள்	-	-	-
ஏனையவை	293,000.00	469,355.09	176,355.09
மொத்தம்	**2,138,000.00**	**2,122,455.09**	**(15,544.91)**

18. நிதி செயற்றிறன் ஆய்வு - 2011

அ. கிழக்குப் பல்கலைக்கழகம்

தலைப்பு	சூத்திரம்	ஒரு மாணவருக்கான செலவு ரூபா.
மாணவர் ஒருவருக்கான மீண்டெழும் செலவு (மீ.செ)	மீ.செ/மொத்த மாணவர்களின் எண்ணிக்கை	116,861.65
மாணவர் ஒருவருக்கான முதலீட்டுச் செலவு (மு.செ)	மு.செ /மொத்த மாணவர்களின் எண்ணிக்கை	23,473.70
மொத்தம்		**140,335.35**

"

ஆ. திருகோணமலை வளாகம்

தலைப்பு	சூத்திரம்	ஒரு மாணவருக்கான செலவு ரூபா.
மாணவர் ஒருவருக்கான மீண்டெழும் செலவு (மீ.செ)	மீ.செ/மொத்த மாணவர்களின் எண்ணிக்கை	131,046.45
மாணவர் ஒருவருக்கான முதலீட்டுச் செலவு (மு.செ)	மு.செ /மொத்த மாணவர்களின் எண்ணிக்கை	13,747.53
மொத்தம்		**144,793.98**

19. 2011ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காளர் தலைமையதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය எனதுஇல My No. — சஎன்/பீரீ/பீ/சயூஎஸ்எல்/எவ்ஏ/2011	ඔබේ අංකය உமது இல No.	දිනය திகதி Date — 2012 செப்தெம்பர் 28

உபவேந்தர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(2)(ஏ) பிரிவு என்பவற்றின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்றும், மூலதனத்திலான மாற்றங்களின் கூற்று மற்றும் காசோட்டக் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்கக் குறிப்புக்கள் உள்ளடங்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) மற்றும் III ஆம் பிரிவுகள் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3), (4) மற்றும் (7) ஆம் உப பிரிவுகள் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவு மற்றும் நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவு என்பவற்றின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

1.2 **நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்**

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவது மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்கல் மற்றும் செயற்படுத்தல், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பிரயோகித்தல், சந்தர்ப்பங்களுக்கு பொருத்தமான வகையில் நியாயமாக கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka
දුරකථනය / தொலைபேசி / Telephone. — 0112887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. — 2887223
ඉලෙක්ට්‍රොනික තැපැල් / ஈ- மெயில் / E-mail. — oaggov@sltnet.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடுசெய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கிழக்குப் பல்கழைக்கழகம், இலங்கையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகளின் நல்லாட்ச்சிக்கான வழிகாட்டல்கள் சுற்று நிருபத்தின் 65% ஆம் பிரிவின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களிற்கிடையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கிழக்கு பல்கலைக்கழகம் இலங்கையின், நிதிக் கூற்றுக்கள் 2012 மே 16 இலேயே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) பட்டதாரி மாணவர் கல்வியின் தொடர்பு மற்றும் தரத்தை முன்னேற்றும் செயற்திட்டம் (ஐஆர்கியூயூஈ) பூர்த்தி செய்யப்பட்டு, சொத்துக்கள் பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டு விட்ட போதிலும் சொத்துக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து 2006 ஆம் ஆண்டில் நன்கொடையாகக் கிடைத்த ரூபா 9,555,427 பெறுமதியான ஆய்வு கூட உபகரணங்கள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 10,692,587 மற்றும் ரூபா 4,985,165 பெறுமதிகள் முறையே நேரடிச் செலவுகள் மற்றும் நேரடி வரவுகள் தொடர்பாக புலனாய்வு செய்து கணக்குகளில் பொருத்தமான சீராக்கங்களைச் செய்வதற்குப் பல்கலைக்கழகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு	இணங்காமை
(அ) நிதிப் பிரமாணங்கள்	
(i) நி.பி 102	1990 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 17,860,815 தொகையான நட்டங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ii) நி.பி 371	கணக்குகளில் இருக்கின்ற ரூபா 66,480,590 கூட்டுமொத்தத் தொகையான முற்பணங்களை அறவிடுவதற்கு 1 தொடக்கம் 15 ஆண்டுகள் வீச்செல்லையான காலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4

(iii)	நி.பி 569	ஒரு வைப்புப் பேரேடு பேணப்பட்டிருக்கவில்லை.
(iv)	நி.பி 702 (3)	ஒப்பந்த உடன்படிக்கைககளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.
(v)	நி.பி 756	மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான பல்கலைக்கழகத்தின் சொத்துக்களில் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(vi)	நி.பி 1646	பல்கலைக்கழகத்துடன் இணக்கப்பட்ட வாகனங்கள் தொடர்பான நாளாந்த ஓட்ட அட்டவனைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(vii)	நி.பி 1647 (பீ)	மீளாய்வாண்டிற்கான வாகனங்கள் மீதான கணிப்புச் சபை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவை

(i)	அத்தியாயம் X இன் பிரிவு 20.6	சம்பளமற்ற சகல விடுமுறைகளும் படிவம் பொது 96 இல் மாதாந்தம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை
(ii)	அத்தியாயம் XXVII இன் பிரிவு – 3.1	பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியின் தமது வருகை மற்றும் வெளிச் செல்லல் நேரத்தைப் பதிவதற்கான ஒரு வருகைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

5

3. நிதிசார் மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகள் விளைவித்திருந்த மீண்டுவரும் செலவினத்திற்கான ரூபா 437,448,075 ஆன அரசாங்க மானியத்தை கணக்கிற்கு எடுத்த பின்னரான ரூபா 464,498,837 ஆன பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 393,635,000 ஆன அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுத்தபின்னருள்ள அந்த ஆண்டிற்கான ரூபா 411,635,687 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் செயற்பாட்டு செலவினம் ரூபா 56,922,395 ஆல் அதிகரித்ததன் காரணமாக நிதிசார் விளைவுகளில் ரூபா 52,863,150 ஆல் மேலும் ஒரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1. செயலாற்றல்

(அ) நடைபெற்ற பரீட்சைகளின் பெறுபேறுகள்

தரப்பட்ட தகவல்களின்படி, மீளாய்வாண்டில் நடைபெற்ற பரீட்சைகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

பீடம்	பரீட்சை நடைபெற்ற காலப்பகுதி	பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை	சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை
விவசாயம்	2011 மார்ச், ஏப்ரல் ஒக்தோபர், நொவம்பர் மற்றும் திசெம்பர்	136	81
கலை	2011 மார்ச், ஏப்ரல், யூன், யூலை, ஒக்தோபர் மற்றும் நொவம்பர்	293	282

வர்த்தகமும் முகாமைத்துவமும்	2011 பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, யூன், யூலை, செப்தெம்பர், நொவம்பர் மற்றும் திசெம்பர்	724	519
விஞ்ஞானம்	2011 பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், ஒக்தோபர், நொவம்பர் மற்றும் திசெம்பர்	59	47
	மொத்தம்	1212	929

(ஆ) **ஒரு மாணவருக்கான கிரயம்**

பல்கலைக்கழகத்தின் 7 பாடநெறிகளிற்காகவும் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 2786 ஆகும். மீளாய்வாண்டில் செய்யப்பட்ட மொத்த மீண்டுவரும் செலவினம் ரூபா 364,049,548 தொகையாகும். ஆண்டிற்கான ஒரு மாணவரின் சராசரி மீண்டுவரும் கிரயம் ரூபா 130,671 ஆகும்.

மாணவர்களின் எண்ணிக்கை	மொத்த செலவினம்	ஒரு மாணவரிக்கான கிரயம்
2786	364,049,548	130,671

(இ) **மகாபொல மற்றும் உதவிப்பணம்**

மீளாய்வாண்டில் மஹாபொலவாக 597 மாணவர்களிற்கு ரூபா 11,981,100 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 1326 மாணவர்களிற்கு ரூபா 17,399,400 ஆன தொகை உதவிப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நூலக நிருவாகம்

நூலகத்திலிருந்து புத்தகங்களை எடுத்திருந்த மாணவர்கள், கல்விசார் பதவியினர் மற்றும் கல்விசாரா பதவியினரால் குறித்த காலத்திற்கிடையில் 515 புத்தகங்கள் திருப்பிகொடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்தப் புத்தகங்களை மீளப் பெறும் நோக்கில் முறையான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்காததுடன் தேசமடைந்த புத்தகங்கள் தொடர்பாகவும் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1998 ஒகத்து 18 ஆம் திகதிய 737 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்று நிருபத்தின் பிரகாரம் உடன்படிக்கைகள் மற்றும் முறிகளை மீறியதிலிருந்தான சகல பெறுகைகளும் பல்கலைக்கழகத்திற்கு கணக்கிட வேண்டியதுடன் நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் என்றவாறான வட்டி உழைக்கும் சொத்துக்களில் முதலீடு செய்ய வேண்டியதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதற்குப் பதிலாக முறிகள் மற்றும் கடப்பாடுகளை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து கிடைத்த ரூபா 70.98 மில்லியன் தொகை நிதிக் கூற்றுக்களில் ஏனைய ஒதுக்கங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் பட்டதாரி மாணவர் கல்வியின் தொடர்பு மற்றும் தரத்தை முன்னேற்றும் செயற்திட்டத்தின் (ஐஆர்கியூயூஈ) கீழ் 155 கணணிகள் மற்றும் 06 யூபீஎஸ் களை கொள்வனவு செய்வதற்காக 2010 ஒகத்து 03 இல் ரூபா 14,559,150 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஒரு சர்வதேச மென்பொருள் கம்பனியிடமிருந்து நன்கொடையாகக் அனுமதிப்பத்திர திறவு கோல்களில் போதிய இருப்பு கிடைத்திருந்த போதிலும் கூட ரூபா 5,186,455 இல் மதிப்பீடு செய்யப்பட்ட 155 அனுமதிப்பத்திர திறவு கோல்களில் (வின்டோஸ் வில்பற்றா பிஸ்தெஸ் டவுன் கிறேடட்ரு எக்ஸ்பீ திற தொழில் ஓஈஎம் உத்தரவுப் பத்திரம்) உள்ளடங்கலாக 155 கணணிகளின் கொள்வனவிற்காக கட்டளை அனுப்பப்பட்டதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. எனினும், அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட அனுமதிப்பத்திர திறவு கோள்கள் ரூபா 1,395,000

பெறுமதியான 15 ஆளுக்குரிய கணனிகள் மற்றும் 15 யூபீஎஸ்களின் பரிமாற்றத்திற்காக வழங்குனருக்கு திருப்பி அனுப்பப்பட்டது. இந்தக் கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக உத்தரவுப் பத்திர திறவுகோல்களின் மிகையான கொள்வனவு காரணமாக பல்கலைக்கழகத்திற்கு ரூபா 3,791,455 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.

(இ) நேர காலத்துடன் பணிக்கொடை கொடுப்பனவு செய்யாதமையால் தொழில் நீதி மன்றத்தின் தீர்ப்பின் படி ரூபா 58,490 தொயையான தண்டப்பணம் செலுத்தப்பட்டது.

(ஈ) ஐக்கியராச்சியத்தில் றீடிங் பல்பலைக்கழகத்தில் பீஎச்டி பட்டப்படிப்பை தொடர்வதற்கு ஒரு சிரேஷ்ட விரிவுரையாளருக்கு 2007 மே 08 இலிருந்து கற்கை விடுமுறையை பல்கலைக்கழகம் வழங்கியிருந்தது. எனினும், கற்கை விடுமுறை 2010 யூன் 08 இலிருந்து 2010 செப்தெம்பர் 07 வரை சம்பளத்துடனும் 2010 செப்தெம்பர் 08 இலிருந்து 2010 திசெம்பர் 07 வரை சம்பளமற்றதாகவும் நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த சிரேஷ்ட விரிவுரையாளருக்கு சம்பளமற்ற விடுமுறையை சம்பளத்துடனான விடுமுறையாகக் கணிப்பிட்டதன் காரணமாக ரூபா 316,401 ஆன தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

4.3. செயற்பாட்டு மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகமானது ஒவ்வொரு ஆராய்ச்சி மானிய செயற்திட்டம் தொடர்பாகவும் முறையான தனித்தனி பதிவேடுகளைப் பேணியிருக்கவில்லை. பேணப்பட்ட பதிவேடுகள் செயற்திட்டங்கள், ஆராய்ச்சிக் குழுவின் அனுமதி மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகள் என்பவை தொடர்பான விபரங்களைக் கொண்டிருக்கவில்லை. மேலே காட்டப்பட்டவை இன்மையால் அந்த ஆராய்ச்சி மானியங்களின் பயன்பாட்டிலிருந்து குறித்த நோக்கங்கள் அடையப்பட்டனவா என்பதை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை.

(ஆ) கலை மற்றும் கலாசார பீடத்தின் 9 ஆவது வருடாந்த ஆராய்ச்சிக் கூட்டத்தை நடத்துவதற்காக ஒரு ஒருங்கிணைப்பாளருக்கு ரூபா 900,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சபையிடமிருந்தான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) 2006 இன் கொள்வனவு வழிகாட்டிகளின் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) இந்த முற்பணம் ஒருங்கிணைப்பாளரின் பெயரில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(இ) மருத்துவ உபகரணங்களின் கொள்வனவு

சுகாதார நலனோம்பு விஞ்ஞான பீடத்தின் (எவ்எச்சீஎஸ்) பாவனைக்காக சென்னையிலுள்ள ஒரு வழங்குனரிடமிருந்து மீளாய்வாண்டில் ரூபா 13 மில்லியன் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 05 விலைகோரல்களிற்குப் பதிலாக 03 விலைகோரல்கள் பெறப்பட்டிருந்தன. 03 கேள்விகளில் 02 கேள்விகள் மோசடியானதுடன் ஒரு கேள்விதாரர் ஆடைத்தொழில் உபபாகங்கள் வழங்குனரென்று காணப்பட்டது.

(ii) கேள்வி ஆவணங்கள் ஒரே தபால் அலுவலகத்திலிருந்து தபாலிடப்பட்டதுடன் சென்னையிலிருந்தான கடிதங்களில் இடப்பட்ட திகதி முத்திரை ஒரே திகதியாக இருந்தது.

(iii) கேள்விகள் எவ்எச்சீஎஸ் இன் மனித உயிரியல் திணைக்களத்தின் தலைவரால் கோரப்பட்டிருந்ததுடன் கேள்விகள் அவரின் சொந்தப் பெயருக்கு முகவரியிடப்பட்டிருந்தன.

(iv) கேள்வி ஆவணங்களின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தாவது இந்திய வழங்குனரிடமிருந்து மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு திணைக்களக் கொள்வனவுக் குழு சிபார்சு செய்திருந்தது.

மேலும் பல்கலைக்கழகத்தின் சபையிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(v) இது தொடர்பாக ஒரு தொழில் நுட்ப மதிப்பாய்வுக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) ரூபா 4 மில்லியனாக மேற்படி உபகரணங்களுடன் கொள்வனவு செய்யப்பட்ட அல்ராசவுன்ஸ்கானர்ரை தொழில்நுட்ப பழுது காரணமாக பயன்படுத்த முடியவில்லை.

(vii) இந்த உபகரணங்களின் விலைகள், மருத்துவ உபகரணங்களிற்கான சர்வதேச சந்தையில் நிலவும் கிரயங்களிலும் பார்க்க உயர்வானதாக இருந்தது. அந்த விலைகளில் சில கீழே தரப்படுகின்றன.

விடயத்தின் பெயர்	சந்தை விலை(ஐ.அ.டொலர்)	கொள்வனவு செய்த விலை (ஐ.அ.டொலர்)
பிரேத அறைக் குளிரூட்டி (பிரேதக் கிடங்கு)	1320 – 7900 (வீச்சில்)	26,000
அல்ராசவுண்டஸ்கானர்	8000 – 15000	36,324
பைனாகுலா தொலைநோக்கி	2123 - 4425	9,015

(viii) ஒரு சரக்கு அகற்றும் கம்பனிக்கு எந்த வித உடன்படிக்கையோ அல்லது அங்கீகாமேஇன்றி ரூபா 669,000 ஆன முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

5. கணக்களித்தன்மை மற்றும் நல்ல ஆளுகை

5.1 கூட்டுத்திட்டம் மற்றும் நடவடிக்கைத் திட்டம்

2003 – 2007, 2007 – 2011 மற்றும் 2010 – 2015 ஆகிய காலப்பகுதிகளிற்கான கூட்டுத்திட்டங்கள் தயாரிக்கப்பட்ட போதிலும் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் பிரகாரமான தொடர்புபட்ட தகவல்கள் கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் திட்டம் வருடாந்தம் நாளது வரையாக்கப்படவில்லை.

5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடடப்பட்ட செலவினத்திற்கும் உண்மையான செலவினத்திற்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

5.3 கணக்காய்வுக் குழு

மீளாய்வாண்டில் 07 கணக்காய்வுக்குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. குழு பல கூட்டங்களில் கணக்காய்வு ஐய வினாக்களிற்குப் பதிலளிக்கும்படி சிபார்சு செய்திருந்தது. எனினும், கணககாய்வாளர் தலைமை அதிபதியால் வழங்கப்பட்ட 07 கணக்காய்வு ஐய வினாக்களிற்குப் பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் பொழுது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) பதிவேட்டுப் பொருட்கள்
(ஈ) முற்பணங்களின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள்
(உ) கொள்வனவுகள்

ஒப்பம் :- எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

S/y

20. இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2011 திசெம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் மீது 1978ஆம் ஆண்டு 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2)ஆம் பிரிவு மற்றும் 1971ஆம் ஆண்டு 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவு என்பவற்றின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை தொடர்பில் கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவத்தின் பதிலளிப்பு

	கணக்காய்வுப் பத்தியின் மேற்கோள்களும் ஆளும் அதிகாரசபையின் முகாமைத்துவ அவதானிப்புகளும்	அவதானிப்பு
2.2 நிதிக்கூற்றுகள் மீதான கருத்துரைகள்		
2:2:1 நிதிக்கூற்றுகளைச் சமர்ப்பிப்பித்தல்		
	2003 யூன் 02ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க நல்லாட்சிக்கான வழிகாட்டல்கள் சுற்று நிருபத்தின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இலங்கை, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2011 திசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மே 16 இலேயே கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்-பட்டிருந்தன.	கணக்காளர் தலைமையதிபதியின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதற்கான காலதாமதம் துணை ஊழியர்களின் பற்றாக்குறையேயாகும். இரு புத்தக பராமரிப்பாளர்களில் ஒருவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டதால் ஒருவரே எல்லா நிதி அறிக்கை வேலைகளையும் மேற்கொண்டார். இதே வேளை பேரவையினால் புதிதாக ஒருவர் பதில் நிதியாளராக நியமிக்கப்பட்டார். மேலும் சில கடந்தகால ஒருங்குபடுத்தற் செயற்பாடுகள் முடிவடையவில்லை. இதனால் தான் காலதாமதம். எதிர்வரும் காலங்களில் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் கணக்கறிக்கையை சமர்ப்பிக்க சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.
2:2:2 கணக்கீட்டுக் குறைபாடுகள்:		
a.	பட்டதாரி மாணவர் கல்வியின் தொடர்பு மற்றும் தரத்தை முன்னேற்றும் செயற் திட்டம் (ஐஆர்கியூயூஈ) பூர்த்தி செய்யப்பட்டு, சொத்துக்கள் பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டு விட்ட போதிலும் சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.	கணக்காளர் தலைமையதிபதியின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. உயர்கல்வி அமைச்சின் செயலாளரின் 15.09.2010ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் IRQUE செயற்றிட்டத்தின் கீழ் பெற்றுள்ள சொத்துக்கள் யாவும் கி.ப.கழக IRQUE திட்ட LTS அலுவலகத்தினால் பொருத்தமான துறைகளுக்கு தற்போது மாற்றப்பட்டுள்ளன. மேலும் நிதியறிக்கையில் சொத்துக்களை முதலாக்கம் தொடர்பாக, IRQUE திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட பேரேட்டில் காணப்படும் சொத்துக்களின் பெறுமதியானது இறுதிக்கணக்கில் விலை மதிப்பாகவா அல்லது தேய்மானத் தொகை மதிப்பாகவா கொள்வதென கடிதத்தில் தெளிவாக குறிப்பிடப்படப்படவில்லை. இதுவே நிதியறிக்கையில் வெளியிட தாமதமாகும். எனினும் 2012ஆம் ஆண்டின் நிதியறிக்கையில் இதனை தேய்மானத் தொகை மதிப்பாக வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

b.	மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து 2006ஆம் ஆண்டில் நன்கொடையாகக் கிடைத்த ரூபா 9,55,427 பெறுமதியான ஆய்வு கூட உபகரணங்கள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.	கணக்காளர் தலைமையதிபதியின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. சம்பந்தப்பட்ட துறைகளில் விபரங்கள் பெறப்பட்டு அவை கணக்கில் சேர்க்கப்படும்.
c.	வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 4,985,165 பெறுமதிகள் முறையே நேரடிச் செலவுகள் மற்றும் நேரடி வரவுகள் தொடர்பாக புலனாய்வு செய்து கணக்குகளில் பொருத்தமான சீராக்கங்களைச் செய்வதற்குப் பல்கலைக்கழகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கணக்காளர் தலைமையதிபதியின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. நாம் ஏற்கெனவே அடையாளம் காணப்படாத நேரடி கடன்களை 2011ஆம் ஆண்டில் வருவாயாக எடுத்துள்ளோம். நாம் ஏற்கெனவே நேரடி பற்றுக்களின் விபரங்களைப் பெற சம்பந்தப்பட்ட வங்கிகளை கோரியுள்ளோம் ஆனால் வங்கிகள் எந்தவிதமான சாதகமான பதிலையும் இதுவரை வழங்கவில்லை. எனினும் 2012ஆம் ஆண்டு முடிவுக்குள் இதை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
2:2:3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை		
அ. நிதிப்பிரமாணங்கள்		
	i. நி.பி 102 1990 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 17,860,815 தொகையான நட்டங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	திறைசேரி, உயர்கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு என்பவற்றுக்கு கோரிக்கைக் கடிதங்கள் ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளன. இதேவேளை இதனைத் துரிதப்படுத்தி இது தொடர்பான அறிக்கையைப் பெறுவதற்கு நிதிக்குழுவினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.
	ii. நி.பி 371 கணக்குகளில் இருக்கின்ற ரூபா 66,480,590 கூட்டுமொத்தத் தொகையான முற்பணங்களை அறவிடுவதற்கு 1 தொடக்கம் 15 ஆண்டுகள் வீச்செல்லையான காலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	செலுத்தப்படாத சகல முற்பணக் கொடுப்பனவுகளும் இனங் காணப்பட்டு, பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது: 01) உள்ளக ஊழியர்களால் பெறப்பட்ட முற்பணங்கள் i). பதவியிலுள்ள ஊழியர்கள். ii). ஏற்கெனவே இளைப்பாறிய ஊழியர்கள். iii). காலஞ்சென்ற ஊழியர்கள். சம்பந்தப்பட்ட ஊழியர்/ நபர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டு அவர்களிடமிருந்து முற்கொடுப்பனவுகளை சம்பளத்திலிருந்து அல்லது UPF இலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 02) வினியோகஸ்தர்களுக்கான முற்பணக் கொடுப்பனவுகள் இது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும். சம்பந்தப்பட்ட ஊழியர்/ நபர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டு அவர்களிடமிருந்து முற்கொடுப்பனவுகளை சம்பளத்திலிருந்து அல்லது UPF இலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

	iii. நி.பி 569 ஒரு வைப்புப் பேரேடு பேணப்பட்டிருக்க-வில்லை.	வைப்புக்கள் தொடர்பான பின்வரும் பேரேடுகள் நிதிப்பிரிவில் கிடைக்கக் கூடியதாகவுள்ளன: • தினத் திரட்டுப் பதிவேடு • பணம் கட்டும் துண்டுப் பதிவேடு
	iv. நி.பி 702 (3) ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை	கூறப்பட்ட ஆவணங்கள் முலதன வேலைகள் பிரிவில் பெறக்கூடியதாக இருக்கின்றன. எதிர்காலத்தில் ஒப்பந்த உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காளர் தலைமையதிபதிக்கு அனுப்பிவைக்கப்படும்
	v. நி.பி 756 மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான பல்கலைக்கழகத்தின் சொத்துக்களில் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்-பட்டிருக்கவில்லை	2011ஆம் ஆண்டுக்கான பௌதீக மெய்மையாய்வு அண்மையில் நடைபெற்ற கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் தாமதித்திருந்தது, தற்போது ஏறக்குறைய நிறைவுபெற்றுள்ளது.
	vi. நி.பி 1646 பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட வாகனங்கள் தொடர்பான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	வாகனங்கள் நாளாந்த பதிவேடுகள் தற்போது நிர்வாகப்பகுதியில் கிடைக்கக் கூடியதாகவுள்ளது.
	vii. நி.பி 1646 மீளாய்வாண்டிற்கான வாகனங்கள் மீதான கணிப்புச்சபை மேற்கொள்ளப்பட்டிருக்க-வில்லை.	நாம் உடன்படுகிறோம். 2012ஆம் ஆண்டிலிருந்து வாகனங்களை மதிப்பிட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.
ஆ.	<u>**பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவை**</u> i. அத்தியாயம் X இன் பிரிவு 20.6 சம்களமற்ற சகல விடுமுறைகளும் படிவம் பொது 96 இல் மாதாந்தம் கணக்காளர் தலைமை அதிபதிக்கு அறிக்கை இடப்பட்டிருக்கவில்லை.	i. நாம் உடன்படுகிறோம், எதிர்காலத்தில் சம்பளமற்ற விடுமுறை தொடர்பான விபரங்களை கணக்காளர் தலைமையதிபதிக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
	ii. அத்தியாயம் XXVII இன் பிரிவு 3.1 பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியினா் தமது வருகை மற்றும் வெளிச் செல்லல் நேரத்தைப் பதிவதற்கான ஒரு வருகைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.	ii. வழமையாக கல்விசார் ஊழியர்கள் தங்கள் வரவுகளை பதிவதில்லை. எவ்வாறாயினும், பீடங்களால் வரவு தொடர்பான விபரங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.
3 நிதிசார் மீளாய்வு		
3.1 நிதிசார் விளைவுகள்		
4. செயற்பாட்டு மீளாய்வு		
4.1. செயலாற்றல்		
அ.	நடைபெற்ற பரீட்சைகளின் பெறுபேறுகள்	குறிக்கப்பட்டது
ஆ.	ஒரு மாணவருக்கான கிரயம்	குறிக்கப்பட்டது
இ.	மாகபொல மற்றும் உதவிப்பணம்	குறிக்கப்பட்டது

ஈ.	**நூலக நிருவாகம்** நூலகத்திலிருந்து புத்தகங்களை எடுத்திருந்த மாணவர்கள், கல்விசார் பதவியினர் மற்றும் கல்விசாரா பதவியினரால் குறித்த காலத்தற்கிடையில் 515 புத்தகங்கள் திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்தப் புத்தகங்களை மீளப் பெறும் நோக்கில் முறையான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்காததுடன் சேதமடைந்த புத்தகங்கள் தொடர்பாகவும் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நாம் உடன்படுகின்றோம். சில புத்தகங்கள் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும் இறுதி நினைவூட்டல்கள் ஏற்கெனவே இரவல் பெற்றவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவற்றுக்கும் பதிலளிக்காவிட்டால் புத்தகத்தின் பெறுமதியும் ஈடுசெய்ய வேண்டிய பணத்துடன் அவர்கள் சேவையிலிருந்தால் சம்பளத்திலிருந்து அல்லது UPF இலிருந்து அறவிடப்படும்.
4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை		
அ.	1998 ஒகத்து 18ஆம் திகதிய 737ஆம் இலக்க பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் சுற்று நிரூபத்தின் பிரகாரம் உடன்படிக்கைகள் மற்றும் முறிகளை மீறியதிலிருந்தான சகல பெறுபேறுகளும் பல்கலைக்கழகத்திற்கு கணக்கிட வேண்டியதுடன் நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் என்றவாறான வட்டி உழைக்கும் சொத்துக்களில் முதலீடு செய்ய வேண்டியதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதற்குப் பதிலாக முறிகள் மற்றும் கடப்பாடுகளை மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து கிடைத்த ரூபா 70.98 மில்லியன் தொகை நிதிக் கூற்றுக்களில் ஏனைய ஒதுக்கங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.	நாங்கள் இதற்கு உடன்படுகிறோம், உடன்படிக்கைகள் மற்றும் முறிகளை மீறியவர்களிடமிருந்து அறவிடப்பட்ட பணமானது நிலையான வைப்பில் இடப்பட்டு அவற்றிலிருந்து பெறப்பட்ட வட்டியானது பல்பலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் இல: 737, 18.08.1998 திகதியிடப்பட்ட சுற்றுநிருபம் மற்றும் அடுத்து வந்த இல: 805, 10.07.2002 திகதியிடப்பட்ட சுற்றுநிருபம் ஆகியவற்றின் பிரகாரம் பயன்படுத்தப்பட்டது. எனினும் சென்ற காலங்களில் மேற்படி சுற்று நிருபங்களின் பிரகாரம் செயற்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. எதிர்காலத்தில் நாம் குறிப்பிடப்பட்டபடி செயற்படவுள்ளோம்.
b.	2010ஆம் ஆண்டில் பட்டதாரி மாணவர் கல்வியின் தொடர்பு மற்றும் தரத்தை முன்னேற்றும் செயற்திட்டத்தின் (ஐஆர்கியூயூஈ) கீழ் 155 கணனிகள் மற்றும் 06 யூபீஎஸ் களை கொள்வனவு செய்வதற்காக 2010 ஓகத்து 03 இல் ரூபா 14,559,150 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஒரு சர்வதேச மென்பொருள் கம்பனியிடமிருந்து நன்கொடையாக அனுமதிப்பத்திர திறவு கோல்களில் போதிய இருப்பு கிடைத்திருந்த போதிலும் கூட ரூபா 5,186,455 இல் மதிப்பீடு செய்யப்பட்ட 155 அனுமதிப்பத்திர திறவு கோல்களில் (வின்டோஸ் வில்பற்றா பிஸ்தெஸ் டவுன்கிறேட் ரூ எக்ஸ்பீ திற தொழில் ஓஎம் உத்தரவுப் பத்திரம்) உள்ளடங்கலாக 155 கணனிகள் கொள்வனவிற்காக கட்டளை அனுப்பப்பட்டதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. எனினும், அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட அனுமதிப்பத்திர திறவு கோள்கள் ரூபா 1,395,000 பெறுமதியான 15 ஆளுக்குரிய கணனிகள் மற்றும் 15 யூபீஎஸ்களின் பரிமாற்றத்திற்காக வழங்குனருக்கு திருப்பி அனுப்பப்பட்டது. இந்தக் கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக உத்தரவுப்பத்திர திறவுகோல்களின் மிகையான கொள்வனவு காரணமாக பல்கலைக்கழகத்திற்கு ரூபா 3,791,455 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.	கணக்காளர் தலைமையதிபதியின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. கிழக்குப் பல்கலைக் கழகத்தின் முகாமை 155 கணனிகள் மற்றும் UPSகள் கொள்வனவு தொடர்பான குறைபாட்டை ஆராய்வதற்கு ஒரு விசாரணைக் குழுவொன்றை நியமித்துள்ளது. இவ் விசாரணைக் குழு அதன் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. இதேவேளை பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுத் தலைவரினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவும் அதனை ஆராய்ந்து அதன் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. இவற்றின் அடிப்படையில், தற்போது குற்ற அறிக்கை தயாரிக்கப்படுகிறது. விரைவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இது வழங்கப்படும். கணக்காளர் தலைமையதிபதி அவர்களுக்கு இது தொடர்பான விளைவுகள் பற்றி அறிவிக்கப்படும்.

c.	நேர காலத்துடன் பணிக்கொடை கொடுப்பனவு செய்யாமையால் தொழில் நீதிமன்றத்தின் தீர்ப்பின் படி ரூபா 58,490 தொகையான தண்டப்பணம் செலுத்தப்பட்டது.	தற்போது பல்கலைக்கழகமானது தொழிலாளர் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது, நீதிமன்றத்தின் தீர்ப்பின் பின் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.
d.	ஐக்கியராச்சியத்தில் றீடிங் பல்கலைக்கழகத்தில் பீஎச்டி பட்டப்படிப்பை தொடர்வதற்கு ஒரு சிரேஷ்ட விரிவுரையாளருக்கு 2007 மே 08 இலிருந்து கற்கை விடுமுறையை பல்கலைக்கழகம் வழங்கியிருந்தது. எனினும், கற்கை விடுமுறை 2010 யூன் 08 இலிருந்து 2010 திசெம்பர் 07 வரை சம்பளமற்றதாகவும் நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த விரேஷ்ட விரிவுரையாளருக்கு சம்பளமற்ற விடுமுறை சம்பளத்துடனான விடுமுறையாகக் கணிப்பிட்டதன் காரணமாக ரூபா 316,410 ஆன தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.	கணக்காளர் தலைமையதிபதியின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்விடயம் தொடர்பாக 20.11.2011 இல் நடைபெற்ற நிதிக்குழுவின் 22ஆவது கூட்டத்தில் ஆராயப்பட்டு அதன் பரிந்துரையுடனும், கிழக்குப் பல்கலைக்கழக பேரவைக்கு பதிலாக கடமையாற்றிய அதிகாரம்பெற்ற அதிகாரி அவர்கள் மேலதிக கொடுப்பனவுகளை பன்னிரண்டு மாத தவணை அடிப்படையில் அறவிட அங்கிகாரம் அளித்துள்ளார். அறவீடு செயற்பாட்டில் உள்ளது.
4.3 செயற்பாட்டு மீளாய்வு **Operating Inefficiencies**		
a.	பல்கலைக்கழகமானது ஒவ்வொரு ஆராய்ச்சி மாணிய செயற்றிட்டம் தொடர்பாகவும் முறையான தனித்தனி பதிவேடுகளைப் பேணியிருக்கவில்லை. பேணப்பட்ட பதிவேடுகள் செயற்திட்டங்கள், ஆராய்ச்சிக் குழுவின் அனுமதி மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகள் என்பவை தொடர்பான விபரங்களைக் கொண்டிருக்கவில்லை. மேலே காட்டப்பட்டவை இன்மையால் அந்த ஆராய்ச்சி மானியங்கள் பயன்பாட்டிலிருந்து குறித்த நோக்கங்கள் அடையப்பட்டனவா என்பதை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை.	கணக்காளர் தலைமையதிபதியின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. கேட்கப்பட்ட ஆவணங்கள் தற்போது விபரமாக கி.ப.கழக பரீட்சைகள் பகுதியில் பராமரிக்கப்படுகிறது. அனைத்து ஆராய்ச்சி மாணியங்களும் தற்போது ஆரய்ச்சிக் குழுவின் ஊடாகவே சமர்ப்பிக்கப்படுகிறது.
b.	கலை மற்றும் கலாசார பீடத்தின் 9 ஆவது வருடாந்த ஆராய்ச்சிக் கூட்டத்தை நடாத்துவதற்காக ஒரு ஒருங்கிணைப்பாளருக்கு ரூபா 900,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. i.). சபையிடமிருந்தான அங்கிகாரம் பெறப்பட்டு இருக்கவில்லை. ii). 2006 இன் கொள்வனவு வழிகாட்டிகளின் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. iii). இந்த முற்பணம் ஒருங்கிணைப்பாளரின் பெயரில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.	கணக்காளர் தலைமையதிபதியின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்விடயமானது 19.08.2011 இல் நடைபெற்ற நிதிக்குழுவின் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு, இது தொடர்பாக ஒரு முடிவை எடுப்பதற்கு, முற்பணக் கொடுப்பனவைக் கையாண்ட முன்னாள் பதில் நிதியாளர் அவர்களின் கருத்தை பெறுவதற்கும் முடிவெடுக்கப்பட்டது. 13.10.2011 இல் நடைபெற்ற 20ஆவது நிதிக்குழுவின் கூட்டத்தில் பதில் நிதியாளரின் ரூபா 900,000.00 விற்கான முற்பணக் கொடுப்பனவு தொடர்பான கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும் கிழக்குப் பல்கலைக்கழக பேரவைக்கு பதிலாக கடமையாற்றிய அதிகாரம்பெற்ற அதிகாரி அவர்கள் நிதிக்குழுவின் பரிந்துரையை அங்கிகரிக்காது, அவரால் நியமிகக்ப்பட்ட குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட இதனுடன் தொடர்பான ஏனைய நிலுவையிலுள்ள சம்பவங்களை ஆராய்வதற்கு முடிவு செய்துள்ளார்.

c.

<u>மருத்துவ உபகரணங்களின் கொள்வனவு</u>

சுகாதார நலனோம்பு விஞ்ஞான பீடத்தின் (எவ்எச்சீஎஸ்) பாவனைக்காக சென்னையிலுள்ள ஒரு வழங்குனரிடமிருந்து மீளாய்வாண்டில் ரூபா 13 மில்லியன் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i). 05 விலைகோரல்களுக்குப் பதிலாலக 03 விலைகோரல்கள் பெறப்பட்டிருந்தன. 03 கேள்விகளில் 02 கேள்விகள் மோசடியானதுடன் ஒரு கேள்விதாரர் ஆடைத்தொழில் உபகரணங்கள் வழங்குனரென்றும் காணப்பட்டது.

ii). கேள்வி ஆவணங்கள் ஒரே தபால் அலுவலகத்திலிருந்து தபாலிடப்பட்டதுடன் சென்னையிலிருந்தான கடிதங்களில் இடப்பட்ட திகதி முத்திரை ஒரே திகதியாக இருந்தது.

iii). கேள்விகள் எவ்எச்சீஎஸ் இன் மனித உயிரியல் திணைக்களத்தின் தலைவரால் கோரப்பட்டிருந்ததுடன் கேள்விகள் அவரின் சொந்தப் பெயருக்கு முகவரி இடப்பட்டிருந்தன.

iv). கேள்வி ஆவணங்களின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தாது இந்திய வழங்குனர்களிடமிருந்து மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு திணைக்கள கொள்வனவுக்குழு சிபார்சு செய்திருந்தது. மேலும் பல்கலைக்கழகத்தின் சபையிடமிருந்து அங்கிகாரம் பெற்றிருக்கவில்லை.

v). அது தொடர்பாக ஒரு தொழில் நுட்ப மதிப்பாய்வுக் குழு நியமிக்கப்பட்டு இருக்கவில்லை.

vi). ரூபா 4 மில்லியகாக மேற்படி உபகரணங்களுடன் கொள்வனவு செய்யப்பட்ட அல்ராசவுன்ஸ்கானர் தொழில்நுட்ப பழுது காரணமாமாக பயன்படுத்த முடியவில்லை.

vii). இந்த உபகரணங்களின் விலைகள், மருத்துவ உபகரணங்களிற்கான சர்வதேச சந்தையில் நிலவும் கிரயங்களிலும் பார்க்க உயர்வானதாக இருந்தது. அந்த விலைகள் கீழே தரப்படுகின்றன.

விடயத்தின் பெயர்	**சந்தை விலை (ஐ.அ.டொலர்))**	**கொள்விலை (ஐ.அ.டொலர்))**
பிரேத அறைக் குளிரூட்டி (பிரேதக் கிடங்கு)	1320-7900 (வீச்சு)	26,000
அல்ராசவுண்ட் ஸ்கானர்	8,000-15,000	36,324
பைனாகுலா தொலைநோக்கி	2,123-4,425	9,015

கணக்காளர் தலைமையதிபதியின் கூற்று ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இவ்விடயமானது 12.05.2012 இல் நடைபெற்ற 11ஆவது கணக்காய்வுக் கூட்டத்தில் ஆராயப்பட்டு 13.05.2012இல் நடைபெற்ற 222ஆவது பேரவைக் கூட்டத்தில் அது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

மேலும் கி.ப.கழகமானது வழங்குனர்களுக்கு முற்கொடுப்பனவை மட்டுமே வழங்கியுள்ளதுடன் நிலுவைத் தொகையானது விசாரணை முடிந்ததன் பின்னர் மட்டுமே செலுத்தப்படும் என வழங்குனர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான பேரவையின் முடிவு கணக்காளர் தலைமையதிபதிக்கு நாளடைவில் அறிவிக்கப்படும்.

	(viii) ஒரு சரக்கு அகற்றும் கம்பனிக்கு எந்த வித உடன்படிக்கையோ அல்லது அங்கீகாரமோ இன்றி ரூபா 669,000 ஆன முற்பாணம் செலுத்தப்பட்டிருந்தது.	

5. கணக்களித்தன்மை மற்றும் நல்ல ஆளுகை

5.1. கூட்டுத்திட்டம் மற்றும் நடவடிக்கைத் திட்டம்

	2003-2007, 2007-2011 மற்றும் 2001-2015 ஆகிய காலப் பகுதிகளுக்கான கூட்டுத்திட்டங்கள் தயாரிக்கப்பட்ட போதிலும் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் பிரகாரமான தொடர்புபட்ட தகவல்கள் கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு இருக்காததுடன் திட்டம் வருடாந்தம் நாளது வரையாக்கப்படவில்லை.	கணக்காளர் தலைமையதிபதியின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனுடன் தொடர்பு-டைய தகவல் சேர்க்கப்பட்டு 2012-2016 ஆம் ஆண்டுகளுக்கான நிறுவனத்தின் கூட்டுத் திட்டமானது பொதுநிர்வாகச் சுற்றறிக்கை இல. பீ.ஈ.டீ/12 க்கு அமைவாக மீளாய் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

5.2. பாதீட்டுக் கட்டுப்பாடு

	பாதீட்டிடப்பட்ட செலவினத்திற்கும் உண்மையான செலவினத்திற்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.	கணக்காளர் தலைமையதிபதியின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் 14.03.2011 ஆம் திகதிய, இல. 03/2011 கடிதத்தின் பிரகாரமான கல்விசார் உழியர்களது உதவுதொகையில் ஏற்பட்ட அதிகரிப்பே பாரிய மாற்றத்திற்கான காரணமாகும்.

6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

	கணக்காய்வின் பொழுது முறைமைகள் மற்றும் கடப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாடுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது. அ). கணக்கீடு ஆ).நிலையான சொத்துக்கள் இ). பதிவேட்டுப் பொருட்கள் ஈ). முற்பணங்களின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள் உ).கொள்வனவுகள்	

ஒப்பம்:- **கலாநிதி கே. கோபிந்தராஜா**
உபவேந்தர்